நீதிமன்றப் படிவ எண்.53
(விதி 42–ஐ காண்க)
சாட்சியின் சான்றுரை
(கு.வி.மு.ச. அத்தியாயம் XXIII)
மகிளா நீதிமன்றம் , கடலூர்
அமர்வு வழக்கு எண்.90 /2019

அரசு தரப்புக்காக அ. சா. 4 சாட்சியின் சான்றுரைகள்

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சின்னப்பிள்ளை | தொழில்/பதவி | |
| கணவர்/தந்தை பெயர் | | வயது | |
| கிராமம் | | வட்டம் | |
| சாட்சிப்பட்டியலில் வரிசை எண் : L.W. 8 | | | |

எதிரி ஆஜரில் இருந்தார்.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on
25th day of June 2025.

**<u>முதல் விசாரணை</u>**– (ஆரம்பிக்கப்பட்ட நேரம் 03.14 )

நான் தற்போது விருத்தாசலத்தில் வசித்து வருகிறேன். நான் பூகட்டும் தொழில் செய்கிறேன். வழக்கில் இறந்துபோன அம்சவள்ளி எனது மகள், நந்தினி அம்சவள்ளியின் மகள் எனது பேத்தி. அ.சா.1/விஜய் எனது மகள் அம்சவள்ளியின் மகன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். எனது மகள் அம்சவள்ளி சாத்தனூரில் வசித்து வந்தார். எனது மருமகன் ஆறுமுகம் 10 வருடங்களுக்கு முன்பு வேறு திருமணம் செய்துகொண்டார். அம்சவள்ளியின் மகள் என்னுடன் இருந்தனர். மகன் அம்சவள்ளியுடன் இருந்தார். குட்டைக்காரத்தெருவில் நான் இருந்தேன். பக்கத்தது தெருவான கைகல தெருவில் எனது மகள் குடியிருந்தார். எனது மகள் அம்சவள்ளி விருத்தாசலத்தில் பேப்பர் கம்பெனியில் வேலை செய்யும்போது எதிரியுடன் தொடர்பு ஏற்பட்டது. எதிரியுடன் எனது மகளுக்கு தொடர்பு ஏற்பட்டதால் எங்களுக்கு பிடிக்காததால் எனது மகளை எனது வீட்டிற்கு வரவேண்டாம் என்று

சொல்லிவிட்டேன். அதன்பிறகு எனது மகள் வந்து சேர்ந்துவிட்டார். எனது மகள் மெட்ராசுக்கு சென்று ஒரு வருடம் குடியிருந்தார். திரும்ப வந்து அதே கைகல தெருவில் குடியிருந்தார். எனது மகளும் ஆஜர் எதிரியும் எனது மகளின் மகன் அ.சா.1–ம் வசித்து வந்தார்கள். எனது பேத்தி நந்தினி அவரது அம்மாவுடன் காலேஜ் படிப்பதற்காக இறப்பதற்கு ஒரு வருடம் முன்பு அம்மா வீட்டிற்கு போய் அம்மாவுடன் குடியிருந்தார். மூன்றாவது வருடம் கல்லூரியில் சேர்வதற்கு எனது பேத்தி நந்தினிக்கு கொடுப்பதற்காக எனது மகள் ரூபாய் அறுபதாயிரம் பீரோவில் வைத்திருந்தார். அதை எடுத்து எதிரி செலவு செய்துவிட்டார். காலை பீரோவை பார்க்கும்போது பணம் இல்லை என்பதால் நீ தான் எடுத்துக்கொண்டாய் என்று எதிரியிடம் அம்சவள்ளி சொல்லி அம்சவள்ளி பெட்ரோலை தன் மீது ஊற்றி அவரே கொளுத்திக்கொண்டார் என்றும் உன்னால் இந்த வீட்டில் சண்டை வருகிறது என்று சொல்லி நந்தினி மீது பெட்ரோல் ஊற்றி எதிரி கொளுத்தி விட்டதாக எனது பேரன் விஜய் என்னிடம் சொன்னான். எனது பேரன் உடனே என்னிடம் ஓடிவந்து ஆஜர் எதிரி கொளுத்தி விட்டதாகவும் இருவரும் எரிந்து கொண்டுஇருப்பதாகவும் யாருமே இல்லை என்றும் வா என்று என்னை கூப்பிட்டார். நானும் எனது மகன் மணிகண்டனும் அம்சவள்ளி வீட்டிற்கு போனோம். அம்சவள்ளியும் நந்தினியும் எரிந்து கொண்டு நின்று கொண்டிருந்தார்கள். அவரிடம் ஏன் இப்படி செய்தாய் என்று நான் கேட்டேன். அதற்கு எனது மகளும் பேத்தியும் காலேஜூக்கு கட்ட பணம் வைத்திருந்ததை எதிரி எடுத்துக்கொண்டு போய்விட்டதாகவும் எதிரி அவர்கள் மேலே பெட்ரோல் ஊற்றி கொளுத்தி விட்டதாகவும் சொன்னார். பின்னர் அவர்கள் எங்கள் ஊர் விருத்தாசலம் கவர்மெண்ட் ஆஸ்பித்திரிக்கு ஆட்டோவில் கூட்டிப்போனோம். விருத்தாசலம் ஆஸ்பித்திரியில் இங்கே முடியாது முண்டியம்பாக்கம் ஆஸ்பித்திரிக்கு எடுத்து போங்கள் என்று சொன்னார்கள். 108 ஆம்புலன்சில் முண்டியம்பாக்கத்திற்கு அம்சவள்ளியையும் நந்தினையையும் கூட்டிச்சென்றோம். முண்டியம்பாக்கம் ஆஸ்பித்திரியில் நந்தினி 17 நாள் சிகிச்சை பெற்றார். அம்சவள்ளி 18 நாள் சிகிச்சை பெற்றார். ஆஸ்பித்திரியில் இருக்கும்போது எனது மகளை போலிஸ்காரர் தான் விசாரித்தார். அப்போதும் இதையே தான் சொன்னார். என்னையும் போலிஸ்காரர் விசாரித்தார்கள். நான் இந்த விவரத்தையே சொன்னேன்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எனது மகள் அம்சவள்ளியின் கணவர் ஆறுமுகம் வேறு திருமணம் செய்துகொண்டு வெளியே சென்றுவிட்டதால் தான் விவாகரத்து இல்லாமலேயே எனது மகள் ஆறுமுகத்துடன் வாழ்ந்து வந்தார் என்றால் சரிதான். எதிரி வேல்முருகனுக்கு குடும்பம் உள்ளது என்று சொன்னால் சரிதான். எனது பேத்தி என்னுடன் இருந்தார். எனது பேரன் 5 வயதிற்கு பிறகு அவரது அம்மாவிடம் சென்றுவிட்டார். எனது மகள் எதிரியுடன் சேர்ந்து வாழ்ந்ததால் எனக்கு பிடிக்கவில்லை என்பதால் என் வீட்டில் சேர்க்கமாட்டேன் என்று சொன்னேனா என்றால் ஆமாம். தற்போது நீதிமன்றத்தில் முதல் விசாரணையில் "*மூன்றாவது வருடம் கல்லூரியில் சேர்வதற்கு எனது பேத்தி நந்தினிக்கு கொடுப்பதற்காக எனது மகள் ரூபாய் அறுபதாயிரம் பீரோவில் வைத்திருந்தார். அதை எடுத்து எதிரி செலவு செய்துவிட்டார். காலை பீரோவை பார்க்கும்போது பணம் இல்லை என்பதால் நீ தான் எடுத்துக்கொண்டாய் என்று எதிரியிடம் அம்சவள்ளி சொல்லி* " என்று நான் சொல்லியதை போலிசார் என்னை விசாரித்தபோது சொன்னேனா என்றால் சொன்னேன். நான் இந்த விவரத்தை போலிசார் என்னை விசாரிக்கும்போது சொல்லவில்லை என்றும் முதன்முதலாக தற்போது நீதிமன்றத்தில் சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. தற்போது நீதிமன்றத்தில் முதல் விசாரணையில் *"அம்சவள்ளியும் நந்தினியும் எரிந்து கொண்டு நின்று கொண்டிருந்தார்கள். அவரிடம் ஏன் இப்படி செய்தாய் என்று நான் கேட்டேன். அதற்கு எனது மகளும் பேத்தியும் காலேஜூக்கு கட்ட பணம் வைத்திருந்ததை எதிரி எடுத்துக்கொண்டு போய்விட்டதாகவும் எதிரி அவர்கள் மேலே பெட்ரோல் ஊற்றி கொளுத்தி விட்டதாகவும் சொன்னார்."* என்று நான் சொல்லியதை போலிசார் என்னை விசாரித்தபோது சொன்னேனா என்றால் சொன்னேன். நான் இந்த விவரத்தை போலிசார் என்னை விசாரிக்கும்போது சொல்லவில்லை என்றும் முதன்முதலாக தற்போது நீதிமன்றத்தில் சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. போலிசார் என்னை எத்தனை முறை விசாரித்தார்கள் என்றால் 2 முறை விசாரித்தார்கள். என்னிடம் கையெழுத்து வாங்கினார்களா என்றால் கைரேகை வாங்கினார்கள். நான் கைரேகை தான் வைப்பேன். விருத்தாசலம் ஜிஎச் மருத்துவமனையில் டாக்டரிடம் எனது மகளும் பேத்தியும் என்ன நடந்தது என்று சொன்னார்களா என்றால் சொன்னார்கள். எனது மகள் ஆஜர் எதிரியுடன் வாழ்ந்ததை எனக்கு பிடிக்காமல்

எனது மகளுக்கும் பேத்திக்கும் வேறு விதத்தில் ஏற்பட்ட இறப்பை பயன்படுத்தி எதிரிக்கு எதிராக சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை** இல்லை

(முடிக்கப்பட்ட நேரம் 03.42)

2025 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 25 ஆம் நாளன்று, 1969–ஆம் ஆண்டு உறுதி மொழி சட்டம் (மையச் சட்டம் 44/1969)–இன் வகைமுறைகளுக்குட்பட்டு உளமார உறுதியளிக்கிறேன்.

சாட்சியின் கையொப்பம்

*" என்னால்/என் முன்பாக திறந்தவெளி நீதிமன்றத்தில் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என வாக்குமூலதாரரால் ஒப்புக்கொள்ளப்பட்டது."*

Sd/–G.Kulasekaran
அமர்வு நீதிபதி,
மகிளா நீதிமன்றம்,
கடலூர்.